நீதிமான் பனைமரத்தைப் போல செழிப்பான்

Song 6 நீதிமான் பனை மரத்தைப்போல செழிப்பான்

Psalm 92 – Sabbath psalm. The righteous flourish like the palm tree and grow like a cedar in Lebanon. Even in old age they remain fruitful because they are planted in the house of the Lord.

நீதிமான் பனைமரத்தைப் போல செழிப்பான்
லீபனோனின் கேதுருவைப்போல வளருவான்
கர்த்தருடைய ஆலயத்தில் நாட்டப்பட்டவர்கள்
தேவனின் பிரகாரங்களில் செழித்திருப்பார்கள்

கர்த்தர் உத்தமர் எந்தன் கன்மலை
அநீதி அவரிடத்தில் என்றுமே இருந்ததில்லை

நீதிமான் முதிர்வயதிலும் கனியைத் தந்திடுவான்
புஷ்டியும் பசுமையுமாய் விளங்கிடுவான்
கர்த்தரின் கிரியைகள் மகத்துவமானவைகள்
அவரின் யோசனைகள் மகா ஆழமானவைகள்

நீதிமான்களின் கொம்பை உயர்த்துகின்றவரே
என் கொம்பையும் காண்டாமிருகத்தின் கொம்பைப்போல உயர்த்துவீர்
புத்தம் புது எண்ணெயால் அபிஷேகம் செய்கிறீர்
நீரே என்றென்றைக்கும் உன்னதராய் இருக்கிறீர்

கர்த்தர் உத்தமர் எந்தன் கன்மலை
அநீதி அவரிடத்தில் என்றுமே இருந்ததில்லை

காலையில் உம் கிருபையையும் இரவிலே உம் சத்தியத்தையும்
அறிவித்திடுவதே நலமாயிருக்குமே
கர்த்தரைத் துதிப்பதும் கீர்த்தனம் பண்ணுவதும்

கர்த்தருக்கு பிரியமாய் இருந்திடுமே

துன்மார்க்கன் புல்லைப்போல உலர்ந்து போயிடுவான்
இவற்றை என் காதுகள் இரண்டும் கேட்டிடும்
சத்துருக்கள் யாவரும் சிதறுண்டு போவார்கள்
இவற்றை என் கண்கள் இரண்டும் கண்டிடும்

கர்த்தர் உத்தமர் எந்தன் கன்மலை
அநீதி அவரிடத்தில் என்றுமே இருந்ததில்லை

மிருக குணமுள்ளவன் கர்த்தரை அறியமாட்டான்
மூடனோ தேவனின் மகிமையை உணரமாட்டான்
அக்கிரமம் செய்பவன் அழிந்து போயிருவான்
எல்லாரும் அழிந்து ஏன் போகவேண்டும்?
எல்லாரும் அழிந்து ஏன் போகவேண்டும்?

நீதிமான் பனைமரத்தைப் போல செழிப்பான்
லீபனோனின் கேதுருவைப்போல வளருவான்
கர்த்தருடைய ஆலயத்தில் நாட்டப்பட்டவர்கள்
தேவனின் பிரகாரங்களில் செழித்திருப்பார்கள்

The Righteous Shall Flourish Like the Palm Tree
Album 23 Song 6